பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 06 2025 Tuesday 7 15 PM

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- முழுமையாக சுகாதார பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் புதிய சுகாதாரக் கொள்கை அமையும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.
- அரசு நிர்வாகத்தில் டிஜிட்டல் நடைமுறைகளில் இந்தியா சர்வதேச நாடுகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது என்று மத்திய தகவல் தொடர்புத்துறை இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் கூறியுள்ளார்.
- வாக்குப்பதிவு தொடர்பான தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையில், நவீன தொழில்நுட்ப உதவியுடன் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கன முதல் அதிகன மழைக்கான வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
- இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராஷ் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

முழுமையாக சுகாதார நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புதிய சுகாதாரக் கொள்கை அமையும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம், பெலகாவி-யில் நடைபெற்ற தனியார் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், முன்கூட்டியே நோயை கண்டறிதல், சிகிச்சை, சுகாதார பராமரிப்பு மற்றும் சுகாதார கல்வியை ஊக்குவிக்கும் வகையில், இந்தப் பதிய சுகாதாரக் கொள்கை அமையும் என்று கூறினார்.

நாடுமுழுவதும் ஒரு லட்சத்து 77 ஆயிரம் ஆயுஷ்மான் சுகாதார மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

29 கோடி பேருக்கு வாய்ப்புற்றுநோய் பாதிப்பு குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, 1 கோடியே 58 லட்சம் பேருக்கு சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதேபோன்று 15 கோடியே 51 லட்சம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 58 ஆயிரம் பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நோய் பாதிப்பு குறித்து கண்டறியப்பட்ட 30 நாட்களுக்குள் சிகிச்சை வழங்கும் வகையில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தொழுநோயை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார நடவடிக்கைகள் காரணமாக, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் வெகுவாக குறைந்து வருவதாக திரு. ஜெ.பி. நட்டா குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரில் Chenab ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள உலகிலேயே மிக உயரமான ரயில் பாலம், புதிய இந்தியாவின் வலிமையின் அடையாளமாக திகழ்கிறது என்று மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், உதம்பூர் - ஸ்ரீநகர் - பாரமுல்லா ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம், பொறியியல் துறையின் திறனுக்கு சான்றாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இயற்கை சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மிக உறுதியுடன் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்த ரயில் பாலத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இம்மாதம் 6ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கவுள்ளதாக திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

டிஜிட்டல் நிர்வாக நடைமுறைகளில் இந்தியா சர்வதேச நாடுகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது என்று மத்திய தகவல் தொடர்புத்துறை இணையமைச்சர் திரு. பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பிரேஸில் தலைநகர் பிரேஸிலியாவில் நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் தகவல் தொடர்புதுறை அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

நீடித்த மற்றும் எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு, டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் கூறினார்.

ஆதார் மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளில் இந்தியா உலகிற்கே முன்னோடியாக திகழ்வதாக திரு. பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேசிய மாணவர் படையை விரிவாக்கம் செய்வதற்கு மத்திய – மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் வலியுறுத்தியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாடுமுழுவதும் தேசிய மாணவர் படையில் கூடுதலாக 3 லட்சம் மாணவர்களை சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள், நிதி ஆதாரம் ஆகியவற்றுக்கு மாநில அரசுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த கருத்தரங்கில் பேசிய தேசிய மாணவர் படையின் தலைமை இயக்குநர் லெப்டினென்ட் ஜெனரல் குர்பீர்பால் சிங், இதன் செயல்பாடுகளை மேம்படுத்தவும், அதன் இலக்குகளை எட்டவும் இளையோரின் பங்களிப்பு அவசியம் என்று தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வாக்குப்பதிவு தொடர்பான தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையில், நவீன தொழில்நுட்ப உதவியுடன் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வாக்குப்பதிவு சதவீதம் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதில் ஏற்படும் காலதாமதம் இதன்மூலம் குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் வாக்குப்பதிவு சதவீதம் குறித்த அறிக்கைகளை வெளியிடும் தற்போதைய நடைமுறைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

>>>>>><<<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவம் மற்றும் அதற்கு எதிராக இந்தியா மேற்கொண்ட ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

புதுதில்லியில் இன்று எதிர்க்கட்சி கூட்டணி சார்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின்னர், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இதுதொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தீவிரவாத செயல்களை ஒரு போதும் சகித்துக் கொள்ள முடியாது என்று முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புனேயில் உள்ள சாவித்ரி பாய் புலே பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்று கூறினார்.

தீவிரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் புதிய அணுகுமுறையை மேற்கொண்டு வருவதாகவும் ஜெனரல் அனில் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் காவலர்கள், ஆயுதப்படை மற்றும் தீயணைப்புத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களில் முன்னாள் அக்னிவீர் வீரர்களுக்கு 20 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க அம்மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் தலைமையில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அக்னிபாத் திட்டத்தின் கீழ் பணிபுரிந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தில்லியில் தலைமைச்செயலகம் அமைந்துள்ள பகுதிகளில் காற்றுமாசை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் ஆயிரம் நீர்த்தெளிப்பான்களும், 140 புகை தடுப்பான்களும் அமைக்கப்படவுள்ளதாக கூறினார்.

தில்லியில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள், BS-IV தரச்சான்று பெற்ற வாகனங்கள், மின்சாரம் மற்றும் இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் வாகனங்களைத் தவிர, பிற வாகனங்களுக்கு தடைவிதிக்கப்படும் என்று அவர் கூறினார்.

இந்த நடைமுறை வரும் நவம்பர் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மங்கோலியப் பிரதமர் திரு. Luvsannamsrain Oyun Erdene தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

நேற்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்ததை அடுத்து அவர் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் கடந்த ஒருவார காலமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், முக்கிய அரசியல் மாற்றமாக அந்நாட்டு பிரதமரின் ராஜினாமா கருதப்படுகிறது.

>>>>>><<<<<<

வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, அஸ்ஸாம், மேகாலயா, மிஸோரம், மணிப்பூர், நாகாலாந்து மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

பின்னர், மழையின் அளவு படிப்படியாக குறையும் என்று அந்த மையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அருணாச்சலப் பிரதேசத்தில் பெய்த கனமழை காரணமாக, அம்மாநில மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில பேரிடர் மேலாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பீகாரில் வடகிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் சூறாவளிக் காற்றுடன் கனமழை பெய்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெற்கு பீகாரில் கடும் வெப்பஅலை வீசுவதாகவும் அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இதனிடையே, கிஷன்கஞ்ச், சஹாரா, அராரியா, சித்தமாரி, முஸாபர்பூர் ஆகிய பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஜகார்த்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 18-21, 21-18, 21-14 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Leo Rolly Carnando – Bagas Maulana -.இணையை வென்றது.

>>>>>><<<<<<

அஹமதாபாதில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பெங்களூரு அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி பந்துவீச தீர்மானித்துள்ளது.

>>>>>>END<<<<<<